## பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு அரசு, சமூக பாதுகாப்புத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகில் கீழ்கண்ட பட்டியலில் உள்ள 3 காலியிட பணியில் தொகுப்பூதியத்தில் பணியாற்றிட புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | பதவியின் பெயர் | பதவியின் எண்ணிக்கை | ஒப்பந்த ஊதியம் மாதத்திற்கு |
|---|---|---|---|
| 1. | பாதுகாப்பு அலுவலர் (நிறுவனம் சார்ந்த) | 1 | 21000/- |
| 2. | சமூக பணியாளர் | 1 | 14000/- |
| 3. | உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் | 1 | 10000/- |

### கல்வி தகுதி மற்றும் முன்அனுபவ விபரம்

**1. பாதுகாப்பு அலுவலர் (நிறுவனம் சார்ந்த)**

பட்டதாரி / முதுகலை பட்டதாரி (10+2+3 மாதிரி) குற்றவியல்/ கல்வியியல்/குழந்தை வளர்ச்சி/உளவியல்/சமூகப்பணி/சமூகவியல் பாடங்களில் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழில், கல்வி, சமூக நலம், குழந்தை நலம் ஆகியவற்றில் மூன்று வருடம் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**2. சமூக பணியாளர்**

பட்டதாரி/முதுகலைபட்டதாரி(10+2+3மாதிரி)குற்றவியல்/உளவியல்/சமூகப்பணி/ சமூவியல் வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் பாடங்களில் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். குழந்தை நலம் சார்ந்த பணியில் இரண்டு வருடம் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**3. உதவியாளர் மற்றும் கணிணி இயக்குபவர்**

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் கணிணி கல்வியியல் பட்டயப்பயிற்சி பெற்றிருக்க வேண்டும். கணிணி இயக்குவதில் ஒரு வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் www.pudukkottai.tn.nic.in என்ற இணையதள முகவரியில் விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவத்தினை அனைத்து சான்றிதழ்களின் நகல்களுடன் இணைத்து நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ 30.11.2019 அன்று மாலை 5.30 மணிக்குள் வந்து சேருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. 30.11.2019-க்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

**விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:**

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்
மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு,
மாவட்ட முன்னாள் படை வீரர்கள் நல அலுவலக வளாகம்,
கல்யாணராமபுரம் 1-ஆம் வீதி,
திருக்கோகர்ணம் அஞ்சல்,
புதுக்கோட்டை - 622002.
தொலைபேசி எண்:**04322-221266 / 7305 89 7305**

மாவட்ட ஆட்சித்தலைவர்
புதுக்கோட்டை.